**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ASSISTANT SESSION'S JUDGE , SIVAGANGAI**

| | | |
|---|---|---|
| Case Number | : | **S.C.No.113/2021** |
| Deposition Of Witness for | : | PW 2 |
| Name | : | **திரு. காளிதாஸ்** |
| Father's Name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **16th April 2025.**

(எதிரி ஆஜர். It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 பசங்கள். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் பெயிண்ட்டராக உள்ளேன். எனது வீட்டிற்கு பக்கத்தில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் பக்கத்தில் ஒரு வீடு உள்ளது அது எதிரி வீடு எனது வீட்டிற்கு மேல் இரண்டு வீடுகள் உள்ளன. மேற்படி சங்கதியை போலிசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் மயக்கத்தில் இருந்ததால் சொல்லவில்லை. சம்பவம் எத்தனை மணிக்கு நடைபெற்றது என்றால் இரவு 8.15 மணிக்கு நடைபெற்றது. எனது மனைவிக்கும், எதிரிக்கும் எத்தனை நாட்களாக பழக்கம் இருந்தது என்றால் இரண்டரை வருடங்களாக இருந்தது, நாளடைவில் தான் அது எனக்கு தெரியவந்தது. எந்த விஷேசத்திற்கு எங்கு சென்றோம் என்றால் பிள்ளையார்பட்டியில் நடைபெற்ற அறுபதாவது சாந்தி விஷேசத்திற்கு சென்றோம். மேற்படி விஷேசத்திற்கு யார், யார் சென்றோம் என்றால் நானும், எனது மனைவியும் சென்றோம் வேனில் அழைத்துச் சென்றார்கள், பஸ்ஸில் சென்றோமா என்றால் இல்லை. சம்பவம் நடைபெற்றபோது நான் அங்கு இருந்தேனா என்றால் விஷேசத்திற்கு சென்றுவிட்டு நானும்,எனது மனைவியும் வீட்டிற்கு வந்தோம் அப்போது கரண்ட் இல்லை, எதிரி அங்கு இருந்தார், எனது மனைவியுடன் வாக்குவாதம் செய்தார், நான் தடுத்து கேட்டபோது கட்டையால் என்னை அடித்துவிட்டார். மேற்சொன்ன சங்கதியை போலிசார் விசாரணையிலும், முதல்விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி அடித்தவுடன் அரசு மருத்துவமனைக்கு காயத்திற்காக சென்றோம், அதன்பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது மயக்கமாகிவிட்டேன். எனக்கும், எனது மனைவிக்கும் சண்டை ஏற்பட்டதா என்றால் எதிரியால் தான் சண்டை ஏற்பட்டது. சண்டையில் எனது மனைவி என்னை கீழே தள்ளி விட்டார் என்றும், அதில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் எனக்கும் எனது

மனைவிக்கும் சண்டை ஏற்படவில்லை. எனது மனைவி என்னை கீழே தள்ளிவிட்டதால் தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றும், எதிரி அடித்து எனக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல, எதிரி தான் என்னை அடித்தார். வழக்கிற்காக எதிரி அடித்தாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார் சங்கதிக்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி என்னையும், எனது மனைவியையும் அடித்து காயம் ஏற்படுத்திடவில்லை என்றால் சரியல்ல. எதிரி, என்னையும், எனது மனைவியையும் ஆபாசமான வார்த்தைகள் பேசவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.04.16 18:25:56 +0530